செ.வெ.எண்.280 நாள்.27.04.2018

திருநெல்வேலி தாமிரபரணி புஷ்கர விழாவினை முன்னிட்டு தாமிரபரணி அன்னைக்கு கோவில் அமைக்கும் பணிகளுக்கான தலை பூஜையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, பணிகளை தொடங்கி வைத்தனர்.

--------

திருநெல்வேலி குறுக்குத்துறை சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அருகில் தாமிரபரணி புஷ்கர விழாவினை முன்னிட்டு தாமிரபரணி அன்னைக்கு கோவில் அமைக்கும் பணிகளுக்கான தலை பூஜை இன்று (27.04.2018) நடைபெற்றது. இப்பூஜையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, கோவில் அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தனர்.

பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

நமது நாட்டில் ஆறுகளை தெய்வமாக வழங்கும் பழக்கம் உள்ளது. நமது நாட்டில் 12 புண்ணிய நதிகளை 12 ராசியாக மதித்து வணங்கும் பழக்கங்கள் உள்ளது. கடந்த ஆண்டு கூட காவிரி புஷ்கர நிகழ்ச்சி காவிரி ஆற்றின் பகுதியில் நடத்தப்பட்டது. மயிலாடுதுறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். தாமிரபரணி புஷ்கர விழா நடைபெறுவதை முன்னிட்டு, ஆற்றங்கரை பகுதிகளை சுத்தப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதற்கான சிறப்பாக ஏற்பாடுகள் செய்ய உத்தரவிட்டுள்ளார்கள். தாமிரபரணி புஷ்கர விழா 144 ஆண்டுகளுக்கு பிறகு, இவ்வாண்டு நவராத்திரி சமயத்தில் கொண்டாடப்படவுள்ளது. அதனையொட்டி, மகாலெட்சுமி சேரிடபிள் டிரஸ்ட் மூலம் தாமிரபரணி அன்னைக்கு சுமார் ரூ.10 இலட்சம் மதிப்பில் குறுக்குத்துறை சுப்பிரமணியசுவாமி கோவில் அருகில் கோவில் அமைக்கப்படவுள்ளது. இப்பணிகள் புஷ்கர விழாவிற்கு முன்னதாகவே முடிக்கப்பட்டு, குடமுழுக்கு நடைபெறவுள்ளது. அன்னை தாமிபரணியை பெருமைப்படுத்தும் விதத்தில் இக்கோவில் அமைக்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் புஷ்கர விழா இவ்வாண்டு நவராத்திரி சமயத்தில் நடைபெறவுள்ளது. தாமிரபரணியை சிறப்பிக்கும் வகையிலும், பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லும் இடமாக குறுக்குத்துறை உள்ளதால், இப்பகுதியில் தாமிரபரணிக்கென கோவில் அமைக்கப்படவுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் 12 ஆண்டுகள் முடிவுற்று குடமுழுக்கு நடக்காத திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என அறிவித்தார்கள். அதனடிப்படையில், திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்–அருள்தரும் காந்திமதி அம்பாள் கோவில் 14 ஆண்டுகளுக்கு பிறகு இன்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜிலாசத்தியானந்த், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் திரு.பரஞ்சோதி, முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.பரணி சங்கரலிங்கம், திரு.கண்ணன் (எ) ராஜு, திரு.ஜெரால்ட், திரு.பல்லிக்கோட்டை செல்லத்துரை, திரு.ஆறுமுகம், மகாலெட்சுமி சேரிடபிள் டிரஸ்ட் ஒருங்கிணைப்பாளர் திருமதி.மகாலெட்சுமி சுப்பிரமணியம், இணை ஒருங்கிணைப்பாளர் திரு.வலசை ஜெயராமன், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், மாநகராட்சி செயற்பொறியாளர் திருமதி.சாந்தி மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.